| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்:01 நாள்: 01.07.2021

***கிருஷ்ணகிரி பாரூர் பெரிய ஏரி மூலம் 7 கிராமங்களிலுள்ள 2,397.42 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.***

***மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தகவல்.***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் அவர்கள் முன்னிலையில் இன்று (01.07.2021) விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களில் பாசனத்திற்காக 2,397.42 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரை திறந்து வைத்தார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.06.2021 அன்று, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்கள் மூலம் முதல் போக பாசனத்திற்காக விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று 2397.42 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி, பாரூர் பெரிய ஏரியில் தற்பொழுது உள்ள நீர் இருப்பு மற்றும் கால்வாயில் வந்துகொண்டிருக்கும் நீர் வரத்தைக் கொண்டும் மேலும், பருவ மழையை எதிர்நோக்கியும், பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு பிரதான கால்வாய் மூலம் வினாடிக்கு 50 கனஅடி வீதமும், மேற்கு பிரதான கால்வாய் மூலம் வினாடிக்கு 20 கனஅடி வீதம் என மொத்தம் வினாடிக்கு 70 கனஅடி வீதம் 135 நாட்களுக்கு முதல் 5 நாட்களுக்கு நாற்றுவிட தண்ணீர் விட்டு பிறகு முறைப்பாசனம் வைத்து மூன்று நாட்கள் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட்டும், நான்கு நாட்கள் மதகை மூடி வைத்தும் முதல் போக பாசனத்திற்காக இன்று 01.07.2021 முதல் 12.11.2021 வரை 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள பாரூர், அரசம்பட்டி, பென்டரஅள்ளி, கீழ்குப்பம், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்பட்டி, தாதம்பட்டி ஆகிய 7 கிராமங்களைச் சார்ந்த நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. கிழக்கு பிரதான கால்வாயின் மூலம் 1,583.75 ஏக்கர் நிலமும், மேற்கு பிரதான கால்வாய் மூலம் 813.67 ஏக்கர் நிலங்கள் என மொத்தம் 2,397.42 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

எனவே, விவசாய பெருமக்கள் பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |